முருகப்பெருமான் துணை

**மகான் ஞானச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

14.09.2021, செவ்வாய்கிழமை

1. வல்லமை கொண்டு உலகினில்
வள்ளல் தன்மையை உருவாக்கி
இல்லாமை போக்கி காத்திட
ஏழாம்படைவீடு படைத்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
கணிவோடு துல்லிய ஆசிதனை
கண்டுரைப்பேன் பிலவ யாளி திங்கள்
3. திங்களிலே இருபான்நவதிகதி குசன்வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 29ம் நாள், 14.09.2021, செவ்வாய்கிழமை)
தேசிகனுக்கு ஞானச்சித்தர் யானும்
ஓங்காரன் தலைமை கொண்ட
உலகமாற்றம் நிகழ உரைப்பேன்
4. உரைக்கவே ஞான ஆட்சிக் காலம்
உலகமெங்கும் நடக்க வேண்டி
மறை போற்றும் மகா சக்திகள்
மண்ணுலகில் அரங்கனை தேர்வு செய்து
5. செய்துமே ஆறுமுகப் பெருமானின்
சிறப்பான சக்தியூட்டி படைப்பை
மெய் ஞான வாழ்வுபட உருவாக்கி
மேலான அவதார நிகழ்த்தி இருக்க
6. இருக்கவே கலிகாலச் சிக்கலை
இந்த அவதாரத்தை கொண்டே
வருத்தமிலா விரட்டும் சேவை
வடிவேலனார் மூலம் நடக்கும்
7. நடக்கவே அரங்கன் செயல்கள்
ஞான பண்டிதன் செயல்தானப்பா
தடையின்றி உலகமக்கள் ஏற்று
தவராஜன் வாழ் ஏழாம் படைவீட்டுக்கு வர
8. வருகவே மக்களிடை சக்திநிலை
வடிவேலன் தரும் வரமாக
தருமசிந்தை தயவு பலமாக
தன்னார்வத் தொண்டாக மாறி

9. மாறியே உலக மக்களிடை
மாற்றம் ஞானவழியாகக் கூடி
ஏறுமுகம் உலகம் அடையும்
எங்கும் வெற்றிமுகம் காணும்
10. காணுமே உலகை தேற்றி
காக்கும் சக்தி பலமாகி இனிதே
ஞானலோக மாற்றம் பெற்று
ஞானச்சித்தர் ஆட்சிக் காலம்
11. காலம் கனியும் படிப்படியாய்
கண்டுமே ஞானயுக மாற்றமாக
வேலவன் தயவாக நடந்தேறும்
விளம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–